DEPOSITION OF WITNESS

(In the Court of the Subordinate Judge`s Sankarankovil )
MCOP No. 71/2018
****

| | |
|---|---|
| Deposition of Witness for | : PW2 |
| Name | : பாலமுருகன் |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 06.02.2023 |

Solemnly affirmed by Thiru.S.Chandra Sekar, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் மனுதார் தரப்பு 2ஆம் சாட்சியாவேன். என் தரப்பு முதல் விசாரணையாக நிரூபண வாக்கு மூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்கு தெரியும்.

**எ.த.கு.வி**

மனுதார் 12ம் வகுப்பு வரை படித்துள்ளார். மனுதாருக்கு தற்பொழுது 34 வயது ஆகிறது. மனுதார் எனது வீட்டில் தான் தங்கியிருந்து வேலை செய்தார். முதல் விசாரணையில் கண்டவாறு மனுதார் பேருந்தில் வேலை செய்திருக்கும் பட்சம் அதற்கான எழுத்து மூல சான்றினை கட்டாயம் சம்பந்தப்பட்ட பேருந்து நிறுவனம் வழங்கியிருக்கும் என்றால் சரியல்ல. மனுதார் விபத்து சமயம் சென்ற இருசக்கர வாகனம் மனுதாருக்கு உரியது தான். விபத்து சமயம் நான் மனுதாருடன் செல்லவில்லை. சம்பவ விபத்தினை நான் நேரடியாக பார்த்தேன். சம்பவ சமயம் நான் சுந்தராஜபுரத்தில் இருந்து ராஜபாளையம் சென்று கொண்டிருந்தேன்.

மனுதாரை *108* ஆம்புலன்சில் ஏற்றும்பொழுது நான் உடன் இருந்தேன். குற்ற வழக்கில் நான் சாட்சியாக உள்ளேன். குற்ற வழக்கில் நான் சாட்சி கிடையாது என்றாலும், மனுதார் அதிக இழப்பீடு பெறும் நோக்கில் மனுதார் எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனவே எனது சாட்சியம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

**ம.வி இல்லை.**